## November 2, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உத்தர பிரதேசத்தின் தலைநகரான லக்னௌ, அதன் புகழ்பெற்ற சமையல் பாரம்பரியத்துக்காக யுனெஸ்கோவின் படைப்பாற்றல் நகரங்கள் பட்டியலில் (சிசிஎன்) அதிகாரபூர்வமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
    i. யுனெஸ்கோ பொது இயக்குநர் ஆட்ரி அஸூலே, உலக அங்கீகாரம் பெற்ற படைப்பாற்றல் நகரங்கள் பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்ட 58 நகரங்களை அறிவித்தார். இதன்மூலம், இந்தப் பட்டியலில் இப்போது 100-க்கும் மேற்பட்ட நாடுகளின் 408 நகரங்கள் - இடம்பெற்றுள்ளன.
2. இந்திய டென்னிஸ் இரட்டையர் பிரிவு ஜாம்பவானும், மூத்த வீரருமான ரோஹன் போபண்ணா ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
    i. கடந்த 2017-இல் பிரெஞ்சு ஓபன் 2024-இல் ஆஸ்திரேலிய ஓபன் என இரண்டு முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார்.
    ii. ரோஹன் போபண்ணா தனது 43-ஆவது வயதில் இரட்டையரில் உலகின் வயதான நம்பர் 1 வீரர் அந்தஸ்தைப் பெற்றிருந்தார்.
3. உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகத்தை எகிப்து திறந்தது. தலைநகர் கெய்ரோவை யொட்டி அமைந்துள்ள கிஸா பிரமிடுக்கு அருகே 20 ஆண்டுகளாக இந்த அருங்காட்சியகத்தை உருவாகிவந்த எகிப்து அரசு, நீண்ட தாமதத்துக்குப் பிறகு தற்போது திறந்துள்ளது.
    i. எகிப்தின் பண்டையகால நாகரிகத்தைப் பறைசாற்றும் வகையில் இந்த அருங்காட்சியகத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரும் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.
    ii. எகிப்து சுற்றலாத் துறைக்கு ஊக்களிக்கும் நோக்கிலும் இந்த அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது
4. கடந்த 2007 ஜனவரி 1 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த எவரும் புகையிலை பொருள்களைப் பயன்படுத்த தடை விதிக்கும் சட்டத்தை மாலத்தீவு அமல்படுத்தத் தொடங்கியுள்ளது.
    i. இதன்மூலம், தலைமுறை அடிப்படையில் புகையிலைக்கு தடை விதிக்கும் உலகின் ஒரே நாடாக மாலத்தீவு ஆகியுள்ளது.
    ii. இந்தத் தடை, மாலத்தீவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் பொருந்தும்.
    iii. எலக்ட்ரானிக் சிகரெட் மற்றும் வேப்பிங் பொருள்களின் இறக்குமதி, விற்பனை, விநியோகம், வைத்திருத்தல் மற்றும் பயன்பாட்டுக்கு முழு தடை உள்ளது. இது அனைத்து வயதினருக்கும் பொருந்தும்.
    iv. இதேபோன்ற தலைமுறை அடிப்படை தடை பிரிட்டனில் சட்டமாக்கப்பட்டு வருகிறது. இன்னும் அமலுக்கு வரவில்லை.
    v. இதுபோன்ற சட்டத்தை முதலில் நியூஸிலாந்து கொண்டு வந்தது. ஆனா 2023 நவம்பரில், அமலுக் வந்த அந்த சட்டம் ஒரு வடத்திற்குள் ரத்து செய்யப்பட்டது.
5. கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் நடந்த சர்ச்சைக்குரிய தேர்தலில் அதிபர் சமய்யா சுலுஹு ஹஸன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
    i. இது குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமய்யாவுக்கு ஆதரவாக 97 சதவீத வாக்குகள் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
    ii. கிழக்கு ஆப்பிரிக்க பிராந்தியத்தில் இத்தனை வாக்கு சதவீதத்தில் யாரும் வெற்றி பெற முடியாது என்று கருதப்படும் நிலையில், தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுகளை இது உறுதிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

iii. கடந்த 2021-ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஜான் போம்பே மகுஃபுலி மரணமடைந்ததைத் தொடர்ந்து, துணை அதிபராக இருந்த சமய்யா சுலுஹு ஹஸன் அதிபர் பொறுப்பேற்றார்.

iv. இந்த நிலையில், கடந்த மாதம் 29-ஆம் தேதி நடந்த அதிபர் தேர்தலுக்கு முன்னதாக, இரு முக்கிய எதிர்க்கட்சிகளுக்கு அவர் தடை விதித்தார். இதன் காரணமாக அவரை எதிர்த்து மிகச் சிறிய கட்சிகளைச் சேர்ந்த 16 பேர் போட்டியிட்டனர். இதனால் இந்தத் தேர்தல் ஒப்புக்காக நடத்தப்பட்டது என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டினர்.

v. இந்தத் தேர்தலை எதிர்த்து தொடர்ந்து நடைபெற்றுவரும் போராட்டங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந் திருப்பதாக அஞ்சப்படுகிறது. எனினும், தான்சானியாவில் இணையதள இணைப்பு முழுமையாக முடக்கப்பட்டுள்ளதால் இது தொடர்பான முழு விவரங்கள் வெளியாகாமல் உள்ளது.

6. ஆந்திரம், சத்தீஸ்கர், ஹரியாணா, கர்நாடகம், கேரளம், லட்சத்தீவு, மத்திய பிரதேசம், பஞ்சாப், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உருவான தினத்தை முன்னிட்டு, அந்த மாநில மக்களுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

i. ஆந்திரம், மத்திய பிரதேசம், கர்நாடகம், கேரளம், லட்சத்தீவு ஆகியவை 1956-ஆம் ஆண்டிலும், பஞ்சாப், ஹரியாணா 1966-லும், மத்திய பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டு சத்தீஸ்கர் 2000-ஆம் ஆண்டிலும் உருவாக்கப்பட்டன. இந்த மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் உருவான தினம் நவம்பர் 1-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

7. ஆசிய-பசிபிக் பிராந்தியம் எந்தவித வற்புறுத்தல்களுக்கும் உள்ளாகாமல் அனைவருக்குமான, சுதந்திரமான பிராந்தியமாக இருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

i. தென் சீன கடல் பகுதியில் சீனா தனது ஆதிக்கத்தை அதிகரித்து வருவது குறித்து உலக நாடுகள் கவலை தெரிவித்துவரும் சூழலில் இக்கருத்தை அவர் தெரிவித்தார். மேலும், 'இந்தப் பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு நாட்டின் இறையாண்மையையும் உறுதிப்படுத்த கூட்டுப் பாதுகாப்பு அணுகுமுறை மிக அவசியமானது' என்றும் ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

ii. மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற 'ஆசியான்' அமைப்பின் உறுப்பு நாடுகள் மற்றும் அதன் பேச்சு வார்த்தை உறுப்பு நாடுகளின் (ஆசியான் - பிளஸ்) பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்ற பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது: கடல்சார் சட்டத்தின் மீதான ஐ.நா. தீர்மானம் (யுஎன்சிஎல்ஓஎஸ்) மற்றும் சுதந்திரமான கடல் சார் பயணம், விமானப் பயணங்களுக்கு இந்தியா ஆதரவளிப்பதும், அந்த நடைமுறைகளைத் தீவிரமாக கடைப்பிடிப்பதும் எந்தவொரு நாட்டுக்கும் எதிரானது அல்ல. மாறாக, பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கானதாகும்.

iii. தென் சீன கடல் பகுதியில் அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்க நடவடிக்கைகளை எதிர்கொள்ள ஆசியான் நாடுகள் உறுதியுடன் இருப்பதோடு கடல்சார் படைகளை வலுப்படுத்த வேண்டும்' என்று அமெரிக்கா வலியுறுத்தியது.

iv. சர்ச்சைக்குரிய தென் சீன கடல் பகுதியில் சீனா தனது ஆதிக்கத்தை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த சில மாதங்களில் கப்பல்கள்

மோதல் சம்பவங்கள், நீர் பீரங்கிகளைப் பயன்படுத்தியது என ஆதிக்க நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. ஆசியான் உறுப்பு நாடுகளான பிலிப்பின்ஸ், வியத்நாம், மலேசியா, புரூணே ஆகியவை தங்களின் கடற்கரை சாந்த பகுதிகளை உரிமை கோரி வரும் நிலையில், சீனா ஒட்டுமொத்த தென் சீன கடல் பிராந்தியத்தையும் உரிமை கோரி வருகிறது. அமெரிக்காவின் முக்கியக் கூட்டாளியான பிலிப்பின்ஸ் சீன கடற்படையுடன் தொடர்ந்து சண்டையிட்டு வருகிறது.

v. தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான' ஆசியான்' அமைப்பில் புரூணே, மியான்மர், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியத்நாம், தைமோர் ஆகிய 11 நாடுகள் உறுப்பினர்களாகவும், இந்தியா, சீனா, ஆஸ்திரேலியா, ஜப்பான், நியூசிலாந்து, தென்கொரியா, ரஷியா, அமெரிக்கா ஆகிய 8 நாடுகள் பேச்சுவார்த்தை உறுப்பினர்களாகவும் இடம்பெற்றுள்ளன.

8.தஜிகிஸ்தானின் அய்னி விமானப்படைத் தளத்தில் இந்தியா தனது செயல்பாடுகளை நிறுத்திக்கொண்டது.

i. இந்தியா-தஜிகிஸ்தான் அரசுகளுக்கு இடையேயான கூட்டு மேம்பாடு மற்றும் செயல்பாட்டுக்கான இருதரப்பு ஒப்பந்தம் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே காலாவதியானது. இதைத் தொடர்ந்து, 2022-ஆம் ஆண்டுக்குள் தளத்தில் இருந்த இந்திய பணியாளர்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் முழுவதுமாக விலக்கிக் கொள்ளப்பட்டன. அண்மையில் இந்த விலகல் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

9.அடுத்த ஆண்டு ஆசிய-பசிபிக் பொருளாதார (ஏபிஇசி) உச்சி மாநாட்டை சீனா நடத்தும் என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் அறிவித்தார். மூன்றாவது முறையாக இந்த உச்சி மாநாட்டை சீனா நடத்த உள்ளது.

i. தென்கொரியாவின் ஜியோங்ஜு நகரில் நடைபெற்ற 32-ஆவது ஏபிஇசி உச்சி மாநாட்டின் நிறைவு விழாவில் உரையாற்றியபோது இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

ii. அடுத்த ஆண்டு ஏபிஇசி பொருளாதார தலைவர்கள் உச்சி மாநாடு சீனாவின் பசிபிக் பெருங்கடல் கடற்கரையையொட்டிய ஷென்ஷென் நகரில் 2026-ஆம் ஆண்டு நவம்பரில் நடத்தப்படும். பல ஆண்டுகளாக ஒரு சிறிய பின்தங்கிய மீன்பிடி கிராமமாக இருந்த ஷென்ஷென், சீன மக்களின் கடின உழைப்பின் காரணமாக அதிசயிக்கும் வகையில் நவீன சர்வதேச பெருநகரமாக இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

iii. ஆசிய-பசிபிக்பொருளாதார ஒத்துழைப்பு (ஏபிஇசி) அமைப்பில் ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான், தென் கொரியா, சீனா, ஹாங்காங், நியூசிலாந்து, அமெரிக்கா, புரூணே, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பின்ஸ், தாய்லாந்து, தைவான், சிலி, மெக்சிகோ, பப்புவா நியூ கினியா, பெரு, ரஷியா, வியத்நாம் ஆகிய 21 நாடுகள் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளன.